[1979 ஏப்ரல் 25

திருச்செந்தூர் நிலவளவங்கி

வினா எண். 805—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர் நிலவள வங்கியில் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் முறைகேடுகள் நடந்ததாகவும், அதற்காக அந்த வங்கியின் தலைவர் மற்றும் இயக்குநர் மேல் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், யார் யார் மீது எந்தவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 71-ன் கீழ், அவ்வங்கியின் முன்னாள் தலைவர், துணைத்தலைவர், பதினாறு இயக்குநர்கள், செயலர், தனி அதிகாரிகள் இருவர் ஆகியோர் மீது அவர்களால் செய்யப்பட்ட சில ஒழுங்கீனங்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மூ. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே என்னுடைய மாவட்டத்தைப் பற்றி கேள்வி கேட்க அனுமதி அளிக்கவில்லை. இப்போது அனுமதி அளித்ததற்கு நன்றி. எற்கெனவே அந்த நிலவள வங்கியில் இருக்கக் கூடிய பல தலைவர்கள் தவறுகள் செய்திருக்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்க என்ன திட்டம் அரசு வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கிற நேரத்தில் விவரமாகச் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக தவறு செய்தவர்களிடம் இருந்து ரூ. 25,061 வசூல் செய்ய இன்றையதினம் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே அந்த நிலவள வங்கியின் தலைவர் மட்டுமல்ல. அதில் சம்பந்தப் பட்ட அதிகாரியும் தவறு செய்திருப்பதாக அங்குள்ள மக்கள் பேசுகிறார்கள். யார் யார் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்செந்தூர் நிலவள வங்கியின் பொறுப்பில் அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் தலைவராக இருந்தார். இதனைப் போலவே அங்கு இருந்தவர்களின் பேரில் நடவடிக்கை எடுத்ததில் அங்குள்ள 18 பேர்களில் பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பொறுப்பில் இருந்தார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு இந்த முறைகேடுகளுக்கு உறு துணையாக இருந்த இரண்டு அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள தனி அதிகாரி உடன்குடியில் கான்கிரீட் போடுவதற்கு 14,206 ரூபாய் பொதுக் குழுவில் ஒப்புதல் பெறாமலேயே, முன்கூட்டியே ஒப்பளிப்பு பெறாமலேயே செலவு செய்ததற்காக சர்சார்ஜ் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த வழக்கு இப்போது விசாரணையில் உள்ளது. இந்த கான்கிரீட் திட்டத்திற்கு அரசு எந்த நிதி உதவியும் அளிக்கவில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்; இந்தக் கூட்டுறவு மோசடி வழக்குகளை எல்லாம் விசாரிப்பதற்கு மிக மிக காலதாமதம் ஏற்படுகிறது. கடைய நல்லூரில் சுமார் 3 கோடி மோசடி சம்பந்தப்பட்ட வழக்கு தயார் செய்வதற்கே நான்கைந்து வருடங்கள் ஆகி விட்டது. இதற்கு மட்டுமே கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவாகியுள்ளது. இன்னும் கேஸ் ட்ரெயிலுக்கு வரவில்லை. இந்த அளவுக்கு காலதாமதம் இருக்கிறது. இதை தவிர்ப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக விசேஷ கோர்ட்டுகள் அமைத்து துரிதமான நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் சொல்வதுபோல், கூட்டுறவு மோசடி வழக்குகளை விரைவாக நடத்த வேண்டும் என்பதற்காகவும், இதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இதற்குப் போதுமான இயந்திரங்கள் இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் மதுரையிலும் சென்னையிலும் இரண்டு நீதிமன்றங்கள் நிறுவி வழக்குகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படடு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் கவனத்தில் கொண்டு நிச்சயமாக இதை அரசு கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.